**செ. கு. எண்: 115** **நாள்: 10.05.2013**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 10.5.2013**

விஷம் போல் ஏறும் விலைவாசியைக் கட்டுப்படுத்தவும், அனைத்துத் துறைகளிலும் கொடிகட்டிப் பறக்கும் ஊழலைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்காமல், டீசல் மீதான மானியத்தை நீக்கி அரசின் வருவாயை பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் விலைவாசி உயர்விற்கு வழி வகுக்கும் டீசல் விலையை மாதா மாதம் மத்திய அரசு உயர்த்துவது ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகும்.

டீசல் விலையை நிர்ணயிக்கும் அதிகாரத்தை கடந்த ஜனவரி மாதம் மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கியதிலிருந்து ஒவ்வொரு முறையும் லிட்டருக்கு 45 காசுகள் என்ற அடிப்படையில் மூன்று முறை டீசல் விலையை எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தியுள்ளன. தற்போது நான்காவது முறையாக டீசல் விலையை லிட்டருக்கு 90 காசுகள் என்ற அளவு உயர்த்தியுள்ளது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை குறைந்து கொண்டே வருவதன் காரணமாக, பெட்ரோல் விலையை இரண்டு முறை குறைத்துள்ள எண்ணெய் நிறுவனங்கள், டீசல் விலையை தற்போது ஏற்றி உள்ளது நியாயமற்ற செயலாகும். இதற்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாதா மாதம் டீசல் விலை ஏற்றப்படும் என்ற கொள்கை காரணமாக, கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ள போதும் டீசல் விலையை ஏற்றியிருப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது ஆகும்.

மத்திய அரசின் எண்ணெய் நிறுவனங்களின் இந்த அறிவிப்பு காரணமாக, சரக்கு வாகனங்களின் கட்டணங்கள், பள்ளி வாகனங்களின் கட்டணங்கள், வாடகை வாகனங்களின் கட்டணங்கள், ரயில் கட்டணங்கள் மேலும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, அத்தியாவசியப் பொருட்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் விலைகள் மேலும் உயரக்கூடும். இதன் விளைவாக, ஏழை, எளிய, நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். இதன்மூலம் பணவீக்கம் மேலும் உயர்ந்து, நாட்டின் பொருளாதாரமும் சீரழியும்.

பொதுமக்களின் நலன் கருதி, நாட்டின் பொருளாதாரத்தை சீரழிக்கும் இந்த டீசல் விலை உயர்வினை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்றும், டீசல் விலை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கியதை திரும்பப் பெறவேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**